# அரசியல்துறை
# தமிழீழ விடுதலைப் புலிகள்

**03.03.2024**
**தமிழீழம்.**

## சாந்தனுக்கு கிட்டாது போன நீதி!

28.02.2024 அன்று தமிழகத்தில் சாவடைந்த "சாந்தன்" என்று அழைக்கப்படும் தில்லையம்பலம் சுதேந்திரராஜா 28.04.1969ல் பிறந்து, யாழ்ப்பாணம் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் கல்வி கற்றார். பின் தாயக விடுதலைக் கனவைச் சுமந்து தன்னை போராளி ஆக்கிக்கொண்டார். 1990 களில் ஆரம்பிக்கப்பட்ட இரண்டாம் கட்ட ஈழப்போரின் போது மருத்துவ தேவைக்காக தமிழகம் சென்றார்.

1991ல் ராஜீவ்காந்தி கொலையின் போது, எமது விடுதலை இயக்கத்தின் இந்திய பொறுப்பாளராக இருந்த பெரிய சாந்தன் அவர்கள் தேடப்பட்ட வேளை சந்தேகத்தின் பெயரில் இன்று நாம் இழந்து நிற்கும் சாந்தன் (சுதேந்திரராஜா) கைது செய்யப்பட்டார். பின்னாளில் கைது செய்யப்பட்ட இந்திய பொறுப்பாளர் பெரிய சாந்தன் அவர்கள் இல்லாது அழிக்கப்பட்டது இன்னும் ஒரு வரலாறு.

விசாரணையின்போது எந்த குற்றத்திலும் தொடர்புபடாத "சுதேந்திரராஜா" பிரதான குற்றவாளிகளில் ஒருவர் ஆக்கப்பட்டார். வழக்கின் முடிவில் மரண தண்டனை தீர்ப்பளிக்கப்பட்டு, அது ஆயுள் தண்டனையாக மாற்றப்பட்டு, விசாரணைக் காலப்பகுதி அடங்கலாக 31 ஆண்டுகள் பூவிருந்தவல்லி சிறப்புச் சிறை மற்றும் வேலூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்ட சாந்தன் அவர்கள், பல்வேறு சட்டப் போராட்டங்கள், தாய் தமிழ் உறவுகளின் உயிர்த் தியாகப் போராட்டங்கள், கண்டனப் போராட்டங்களுக்கு மத்தியில் கடந்த 11.11.2022 அன்று உயர் நீதிமன்ற அறிவுறுத்தலின் பேரில் விடுதலை செய்யப்பட்டார். நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்ட சாந்தன் உட்பட நான்கு ஈழத் தமிழரும் மாநில அரசினால் "குடிவரவு குடியகல்வு" குற்றச்சாட்டின் அடிப்படையில் திருச்சியில் உள்ள சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். இது தனிமைப்படுத்தப்பட்ட எந்தவொரு சட்ட வரம்புகளுக்கும் உட்படாத சிறப்பு முகாமாகும்.

கடந்த மாதம் சாந்தனின் உடல்நிலை பாதிக்கப்பட்டதைத் தொடர்ந்து திருச்சி அரச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, உயர் சிகிச்சைக்காக சென்னை ராஜீவ் காந்தி நினைவு அரசு பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட வேளை சிகிச்சை பலனின்றி 28.02.2024 அன்று உயிரிழந்தார்.

ராஜீவ் காந்தி அவர்களின் பெயரால் கைது செய்யப்பட்டு 31ஆண்டுகளின் பின்னர் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்ட நிலையில் ராஜீவ் காந்தி அவர்களின் பெயரில் அமைந்துள்ள மருத்துவமனையிலேயே சாந்தன் அவர்கள் கொல்லப்பட்டுள்ளார்.

சாந்தன் 31 ஆண்டுகள் சிறை மீளப் போராடி விடுதலையான பின்னர் இறுதி ஒன்றரை ஆண்டுகள் தாய் நிலம் திரும்பப் போராடி அந்த எண்ணம் நிறை வேறாமலேயே கொல்லப்பட்டார் எனும் துயர்மிகு செய்தி அனைத்து தமிழர்களையும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளது. விடுதலை வேண்டிய எங்கள் இனத்தின் விடுதலைப் போராளியை காந்திய தேசம் காவு வாங்கிக்கொண்டது. தமிழீழ மண்ணை தரிசிக்கும் தாகத்துடன் கொடிய சிறை வாழ்வை முடித்து அன்னையையும், தாய் மண்ணையும் காண முடியாத பெருவலியோடு தமிழீழ நாட்டின் மைந்தன் எம்மை விட்டுப்பிரிந்தார்.

தமிழினத்தின் மீது தனது கொடூரமுகத்தை மீண்டும் வெளிகாட்டியிருக்கின்றது இந்திய தேசம். சாந்தனை சாவின் பொறிக்குள் தள்ளியதானது, இந்தியா மீண்டும் எமது மக்களுக்கு இழைத்த  மன்னிக்கமுடியாத குற்றமாகும். அடுத்த தலைமுறை இந்திய தேசத்தின்  வரலாற்றைப் படிக்கும் போது இந்த கொடூர பக்கங்கள் நிச்சயமாக அடையாளப்படுத்தப்படும். மகனின் உயிரற்ற உடலை கண்டதும் மார்பில் அடித்துக் கொண்டு அழுது துடிக்கப்போகும் தாயாரின் கதறலுக்கு எந்தச்சட்ட புத்தகத்தில் இருந்து பாரத தேசம் நியாயம் கற்பிக்கப் போகின்றது.

திருச்சி சிறப்பு முகாம் ஏனைய சிறைகளை விட கொடுமையானது.  புழல் சிறையிலிருந்து ரொபட் பயஸ், மற்றும் ஜெயக்குமாரும், வேலூர் சிறையிலிருந்து சாந்தன் மற்றும் முருகனும் திருச்சி சிறப்பு முகாமுக்கு 11.11.2022 அன்று மாற்றப்பட்டனர். நாட்டை விட்டு அனுப்பும் வரை சிறப்பு முகாமில் வைத்திருக்கின்றோம் என்றார்கள். இன்று வரை நாட்டை விட்டு அனுப்புவதற்கு எந்த முன்னெடுப்புகளும் எடுக்கப்படாமல் சிறைவாசம் அனுபவிக்கின்றார்கள். நாம் சாந்தனை இழந்து விட்டோம். இனியும் எங்களது உறவுகளான திரு.ரொபட் பயஸ், திரு..ஜெயக்குமார், திரு.முருகன் ஆகியோரை இழக்க முடியாது.

இந்திய மத்திய அரசும், மாநில அரசும் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இவர்களை எந்தவித நிபந்தனைகளும் இன்றி விடுதலைசெய்து அவர்களது உறவினர்கள் வாழும் நாடுகளுக்கு  அனுப்பப்பட்டு மிகுதிக்காலத்தை அவரவர் குடும்பத்துடன் வாழ ஆவன செய்ய வேண்டுமென இந்த இக்கட்டான சூழலில் ஒரு வேண்டுகோளை விடுக்கின்றோம்.

மாவீரன் சாந்தன் ஒரு இலட்சியப் போராளி. தன் இனத்திற்காக, இனத்தின் விடுதலைக்காக தனது வாழ்க்கைக் காலத்தின் 33 ஆண்டுகள் சிறையில் தன்னை மெல்ல மெல்ல உருக்கினான். இறுதி மூச்சு நிற்கும் வரை ஈழத்தமிழர்களை நேசித்து தேச விடுதலைக்காக தன்னை அர்ப்பணித்த மாவீரன்.

“உன்னத இலட்சியத்திற்காக உயிர் நீத்த மனிதர்களை சாவு அழித்து விடுவதில்லை நமது தேசத்தின் ஆன்மாவில் அவர்களுக்கு என்றும் அழியாத இடம் உண்டு” எனும் தேசியத் தலைவரின் கூற்றுக்கு அமைய தமிழ் மக்கள் அனைவரதும் நினைவுகளில் மாவீரன் சாந்தன் என்றென்றும் வாழ்வான்.

அவரது பிரிவால் துயரற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கும், அவரது உறவினருக்கும், தமிழ் மக்கள் அனைவருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறையினர் ஆகிய நாம் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்ளும் அதேவேளை, இவரின் விடுதலைக்காக தொடர்ந்து சட்ட ரீதியாகவும் அற வழியாகவும் போராட்டங்களில் ஈடுபட்ட தாய்த் தமிழக உறவுகளின் கரங்களை இறுகப் பற்றிக்கொண்டு, அவர்களின் துயரில் நாமும் பங்குகொள்கின்றோம்.

**“புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்”**

வி.ஜெயாத்தன்

..........................

பொறுப்பாளர்
அரசியல்துறை
தமிழீழ விடுதலைப் புலிகள்.

**தொடர்புகளுக்கு :- தொ.எண் : 00447414466757. மின்னஞ்சல் :** politicaltamileelam@gmail.com